பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

**25 09 2026** **FRIDAY** **6.45 AM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

**1.** தேசிய நலனை கருத்தில்கொண்டே பாதுகாப்புக் கொள்கையை இந்தியா வகுத்து வருவதாக மத்திய அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

**2.** தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் குறித்து காங்கிரஸ் ஆதாரமற்ற புகார்களை தெரிவித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

**3.** கைத்தறி நெசவாளர்களின் தயாரிப்புகளுக்கு சந்தை வாய்ப்புகளை தமிழக அரசு ஏற்படுத்தித் தருவதாக மாநில அமைச்சர் திரு விஜய் பாலாஜி கூறியுள்ளார்.

**4.** தமிழகம் முழுவதும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

**5.** போர்ச்சுக்கல் சர்வதேச சேலஞ்சர் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** — இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள் ---

<<<<<>>>>>>>

தேசிய நலனை கருத்தில்கொண்டே பாதுகாப்புக் கொள்கையை இந்தியா வகுத்து வருவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் ஊடக நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்டு பேசிய அவர், மோதல்களுக்கு தீர்வுகாண ராஜதந்திர நடைமுறைகள் அவசியம் என்றாலும், அதையே நம்பியிருக்கக் கூடாது என்றும், ராணுவத்தை பலப்படுத்துவதும் அவசியம் என்றும் அவர் கூறினார்.

ராணுவ பலம் மற்றும் ராஜதந்திரம் ஆகியவற்றுக்கு இடையே சமநிலையை கடைபிடிப்பது அவசியம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

உலகம் முழுவதும் அமைதியை நிலைநாட்ட ராஜதந்திரத்தை இந்தியா பயன்படுத்தி வருவதாகவும் அவர் கூறினார்.

நாட்டிற்கு எதிரான அனைத்து அச்சுறுத்தல்களை எதிர்கொள்ள தற்காப்பு நடவடிக்கைகள் மட்டுமல்லாமல், முப்படைகளின் திறனையும் மேம்படுத்துவதில் அரசு கவனம் செலுத்தி வருவதாக திரு ராஜ்நாத் சிங் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

தேர்தல் ஆணையத்தின் செயல்பாடுகள் மற்றும் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப்பணிகள் தொடர்பாக காங்கிரஸ் ஆதாரமற்ற புகார்களை தெரிவித்து வருவதாக பிஜேபி குற்றம் சாட்டியுள்ளது.

புதுதில்லியில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அக்கட்சியின் செய்தித்தொடர்பாளர் திரு சுதான்ஷூ திரிவேதி, மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின்படி தேர்தல் ஆணையம் எப்போது வேண்டுமானாலும் தகுந்த முறையில் சிறப்பு தீவிர திருத்தப்பணிகளை நடத்த அதிகாரம் பெற்றுள்ளதாக அவர் கூறினார்.

<<<<<>>>>>>>>

மதுராந்தகம் மற்றும் தாராபுரம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலில் தவெக வெற்றிபெறும் என்று அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான திரு அருண்ராஜ் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தாராபுரத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், திமுக-வும், அஇஅதிமுக-வும் தவெக அரசு குறித்து உண்மைக்கு மாறான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதாக குற்றம் சாட்டினார்.

சட்டப்பேரவைத் தேர்தல் முடிந்தவுடன் திமுக-வும், அஇஅதிமுக-வும் கூட்டணி அரசு அமைக்க முயன்றதாகவும், அதை எதிர்த்துத்தான்

அஇஅதிமுக சட்டமன்ற உறுப்பினர்கள் சிலர் அக்கட்சியிலிருந்து விலகிவிட்டதாகவும் திரு அருண்ராஜ் தெரிவித்தார்.

<<<<<>>>>>>>

கைத்தறி நெசவாளர்களின் தயாரிப்புகளுக்கு சிறந்த சந்தை வாய்ப்புகளை மாநில அரசு ஏற்படுத்தித் தருவதாக அத்துறைக்கான மாநில அமைச்சர் திரு விஜய் பாலாஜி தெரிவித்துள்ளார்.

சென்னையில் கோ ஆப் டெக்ஸ் மண்டல மேலாளர்களுடன் நேற்று நடைபெற்ற ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அவர், இந்தாண்டு தீபாவளி பண்டிகையை முன்னிட்டு, கோ ஆப் டெக்ஸ் விற்பனை நிலையங்கள் மூலம், 100 கோடி ரூபாய் அளவிற்கு கைத்தறித் துணிகளை விற்பனை செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வாடிக்கையாளர்களை கவரும் வகையில், புதிய வடிவமைப்புகள் மற்றும் தரமான கைத்தறி துணி வகைகளை அறிமுகப்படுத்த வேண்டும் என்று அவர் வலியுறுத்தினார்.

விற்பனை நிலையங்களில் போதுமான அளவு கைத்தறித் துணிகளை இருப்பு வைத்து, வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சேவையை வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

<<<<<>>>>>>>

மதுராந்தகம் சட்டப்பேரவைத் தொகுதி இடைத்தேர்தலையொட்டி அரசியல் கட்சிகளின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

தங்களது வேட்பாளர்களை ஆதரித்து பல்வேறு கட்சிகளின் தலைவர்கள் வாக்காளர்களை சந்தித்து ஆதரவு திரட்டி வருகின்றனர்.

மாமண்டூரில் நேற்று நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் பேசிய அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு எடப்பாடி பழனிசாமி, தவெக அரசு ஆட்சிப்பொறுப்புக்கு வந்து கடந்த நான்கு மாதங்களில் 40 ஆயிரம் கோடி ரூபாய்க்கு கடன் வாங்கியுள்ளதாக கூறினார்.

சட்டப்பேரவைத் தேர்தலின்போது அளித்த வாக்குறுதிகளை அரசு நிறைவேற்றவில்லை என்றும், குடும்பத் தலைவிகளுக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய் வழங்கப்படும் என்று வாக்குறுதியும், முதியோர் உதவித்தொகை 3 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும் என்ற வாக்குறுதியும் நிறைவேற்றப்படவில்லை என்று திரு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

இதனிடையே, மதுராந்தகம் தொகுதியில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையை தீவிரப்படுத்தியுள்ளனர்.

நேற்று ஒரு காரில் உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட நான்கரை லட்சம் ரூபாயை தேர்தல் அதிகாரிகள் பறிமுதல் செய்து மதுராந்தகம் வட்டாட்சியர் அலுவலகத்தில் ஒப்படைத்தனர்.

<<<<<>>>>>>>

மாநிலம் முழுவதும் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளதாக மக்கள் நல்வாழ்வுத்துறை தெரிவித்துள்ளது.

மதுரையில் இப்பணிகளை ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மக்கள் நல்வாழ்வுத்துறை முதன்மை செயலர் திரு தரேஷ் அகமது, காய்ச்சல் அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக மருத்துவமனையை அணுகி சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக்கொண்டார்.

***(Sound Byte — தரேஷ் அகமது - 55 Sec.)***

<<<<<>>>>>>>

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் சென்னை, காஞ்சிபுரம், செங்கல்பட்டு உட்பட 16 மாவட்டங்களின் ஒரிரு இடங்களில் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

தமிழகத்தின் ஏனையப் பகுதிகள் மற்றும் புதுச்சேரி, காரைக்காலை பகுதிகளில் லேசான மழை பெய்யும் என்று அந்த மையம் கூறியுள்ளது.

<<<<<>>>>>>>

*இருவரிச் செய்திகள்*

அமெரிக்கா — இஸ்ரேல் இடையேயான உறவு தொடர்ந்து வலுவடைந்து வருவதாக இஸ்ரேல் பிரதமர் திரு பெஞ்சமின் நெத்தன்யாகு தெரிவித்துள்ளார்.

-------------------

நியூயார்க் சென்றுள்ள வெளியுறவுத்துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் நேற்று எகிப்து, ஜோர்டான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளின் வெளியுறவுத்துறை அமைச்சர்களை சந்தித்து பேசினார்.

------------------

திருப்பதி மலைப்பாதையில் அலிபிரி என்ற இடத்தில் சிறுத்தை புலி நடமாட்டம் உள்ளதால் அப்பகுதியில் வாகனங்களை நிறுத்த வேண்டாம் என்று வனத்துறையினர் எச்சரித்துள்ளனர்.

----------------

மகாராஷ்ட்ரா மாநிலம் **Palghar**-ல் ரப்பர் ஆலையில் சுற்றுச்சுவர் இடிந்து விழுந்ததில் தொழிலாளர்கள் மூன்று பேர் உயிரிழந்தனர்.

----------------------

திருப்பத்தூர் மாவட்டம் ராமக்காபேட்டையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள ஆதார் சேவை மையம் இன்று முதல் செயல்பட உள்ளது.

-----------------

துபாய் மற்றும் சிங்கப்பூரிலிருந்து விமானங்களில் திருச்சி வந்த இரு பயணிகளிடமிருந்து ஒரு கோடியே **31** லட்சம் ரூபாய் மதிப்பிலான தங்கத்தை சுங்கத்துறையினர் பறிமுதல் செய்தனர்.

-----------------------

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று மாலை நடைபெறவுள்ள எரிவாயு நுகர்வோர் குறைதீர் கூட்டத்தில் பொதுமக்கள் கலந்துகொண்டு தங்களது குறைகளை தெரிவிக்கலாம் என்று மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது.

----------------

கடலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் நேற்று ஒரே நாளில் **24** கோடி ரூபாய் அளவிற்கு பருத்தி விற்பனை நடைபெற்றுள்ளது.

--------------

கன்னியாகுமரி மாவட்டம் குளச்சல் அருகே நீர்காகத்தை வேட்டையாடி சமைத்து சாப்பிட்ட பிரபல சமூக வலைதள பதிவாளரை வனத்துறையினர் கைது செய்தனர்.

---------------

திருவண்ணாமலை அருள்மிகு அருணாச்சலேஸ்வரர் திருக்கோவில் புரட்டாசி மாத பிரதோசத்தை முன்னிட்டு பெரிய நந்தி பகவானுக்கு நேற்று நடைபெற்ற சிறப்பு அபிஷேகத்தில் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர்.

------------------

சென்னை மாநகராட்சி மாமன்ற உறுப்பினர்களுக்கான வார்டு மேம்பாட்டு நிதியின்கீழ், புதிய சாலைகள் அமைக்கப்படும் என்று மாநகராட்சி ஆணையர் திரு சமீரன் தெரிவித்துள்ளார்.

-----------------

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு சென்னையில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக மாநகராட்சி துணை ஆணையர் திரு கௌஷிக் தெரிவித்துள்ளது.

-----------------

சென்னை பெருநகர காவல்துறை சார்பில் கல்லூரி மாணவர்களுக்கான சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

<<<<<>>>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

போர்ச்சுக்கல் சர்வதேச சேலஞ்சர் மகளிர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Sahaja Yamalapalli** — இங்கிலாந்தின் **Naiktha Bains** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற இரட்டையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் இந்த இணை, **6-7, 7-5, 10-3** என்ற செட் கணக்கில், ஜப்பானின் **Mana Ayukawa** — அமெரிக்காவின் **Emily Webley Smith** இணையை வென்றது.

**-------------**

ஆசிய விளையாட்டுப் போட்டியில் **400** மீட்டர் கலப்பு தொடர் ஓட்டத்தில் வெள்ளிப்பதக்கம் வென்ற இந்திய அணியினருக்கும், பத்தாயிரம் மீட்டர் மகளிர் ஓட்டப்பந்தயத்தில் வெண்கலப்பதக்கம் வென்ற சீமா குமாரிக்கும் முதலமைச்சர் திரு விஜய், தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல். முருகன், உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

**<<<<<END>>>>>>**